



34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com






நதி: 34 பாலம்: 22 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 15, 2024

# மீண்டும் அமெரிக்க அதிபராகிறார் டொனால்ட் டிரம்ப்

அமெரிக்காவின் 47ஆவது அதிபராக 2024 நொவெம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் தீர்க்கமான வெற்றி பெற்று அமெரிக்காவின் 45ஆவது அதிபராக இருந்த டொனால்ட் டிரம்ப் மீண்டும் அமெரிக்க அதிபராகிறார்.

கடந்த விளம்பரம் பத்திரிகையில் அமெரிக்க அதிபருக்கான தேர்தல் நொவெம்பர் 5ஆம் திகதி நடைபெறாலும் அன்று நடைபெறும் நாடுதழுவிய வாக்கெடுப்புக்கள் அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்ய மாட்டாது எனக் கூறியிருந்தோம். அதேபோல் அன்று நடைபெற்ற வாக்கெடுப்புக்கள்மூலம் அமெரிக்க மக்கள் அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்யும் தெரிவாளர்களைத் (State's Electors)தான் தமது மாநிலங்களில் இருந்து தெரிவு செய்துள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட தெரிவாளர்களின் எண்ணிக்கையை கீழே உள்ள அட்டவணையில் பார்க்கவும்.

நொவெம்பர் 5ஆம் திகதி அமெரிக்க மக்கள் நாடு முழுவதிலும் இருந்து 538 தெரிவாளர்களைத் தெரிவு செய்துள்ளனர். அமெரிக்காவின் 50 மாநிலங்கள் மற்றும் தலைநகர் இருக்கும் வாஷிங்டன் D.C. உம் சேர்த்து 51 பிரதேசங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 538 தெரிவாளர்களும் எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப் பார்ப்போம்.

வழமையாகத் தொடர்ந்து ஜனநாயகக் கட்சித் தெரிவாளர்களைத் தெரிவு செய்யும் 20 பிரதேசங்களும் இம்முறையும் ஜனநாயகக்கட்சித் தெரிவாளர்களாக மொத்தமாக 226 பேரைத் தெரிவு செய்தன.

அதேபோல் வழமையாகத் தொடர்ந்து குடியரசுக்கட்சித் தெரிவானவர்களைத் தெரிவு செய்யும் 24 பிரதேசங்களும் இம்முறையும் குடியரசுக் கட்சித் தெரிவாளர்களாக மொத்தமாக 219 பேரைத் தெரிவு செய்தன.

ஜனநாயகக்கட்சிக்கும், குடியரசுக் கட்சிக்கும் மாறி மாறி வாக்களித்து தெரிவாளர்களைத் தெரிவு செய்யும் மீதமுள்ள 7 மாநிலங்களும் இம்முறை ஒன்றாகச் சேர்ந்து குடியரசுக்கட்சித் தெரிவாளர்களாக மொத்தமாக 93பேரைத் தெரிவு செய்தன. இதனால் நாடு முழுவதும் குடியரசுக்கட்சிக்கு 31 பிரதேசங்களிலும் இருந்து தெரிவாளர்களாக 312 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


The current president-elect Donald Trump's address to the nation after being elected 47th president of the United States Thanks: The Times of Israel

இவ்வாறு அமெரிக்காவின் 51 பிரதேசங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 538 தெரிவாளர்களும் 2024 டிசம்பர் 17ஆம் திகதி வாக்களிப்பின் மூலம் அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்வர்.

ஆனால், ஜனநாயகக் கட்சிக்கு 20 பிரதேசங்களில் இருந்து 226 தெரிவாளர்களும், குடியரசுக்கட்சிக்கு 31 பிரதேசங்களிலிருந்து 312 தெரிவாளர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளபடியால் டிசம்பர் 17ஆம் திகதி குடியரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட டொனால்ட் டிரம்ப் அதிபராகத் தெரிவு செய்யப்படுவது நிச்சயம். அத்துடன் அவருடன் சேர்ந்து போட்டியிட்ட J.D. வான்ஸ் அமெரிக்க துணை அதிபராகத் தெரிவு செய்யப்படுவர்.

2024 டிசம்பர் 17ஆம் திகதி நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட 538 தெரிவாளர்களும் வாக்களித்தாலும், அவ்வாக்குகள் அமெரிக்க மக்கள் சபையில் 2025 ஜனவரி 6ஆம் திகதி அன்று எண்ணப்பட்டு அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் தெரிவு செய்யப்பட்டது உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

பின்னர் அமெரிக்க அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் டிரம்ப் மற்றும் அமெரிக்க துணை அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட J.D. வான்ஸ் இருவரும் 2025 ஜனவரி 20ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்பர். அதுவரையும் டொனால்ட் டிரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் (President Elect) எனவும், J.D.வான்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட துணை அதிபர் (Vice President Elect) எனவும் அழைக்கப்படுவர்.

இம்முறை நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் வேட்பாளர்களுக்கு நாடு முழுவதும் விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு: தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை இன்னமும் முடியாதபடியால் கீழே தரப்பட்டுள்ள எண்ணிக்கை 14ஆம் திகதிவரை எண்ணப்பட்ட வாக்குகள் ஆகும்.

பல இடங்களில் 2%மான வாக்குகள் இன்னும் எண்ண இருப்பது தெரிவாளர்கள் தெரிவை மாற்ற மாட்டாது. பெரும்பான்மை மக்களின் வாக்குகள்

| கட்சியின் பெயர் | வேட்பாளரின் பெயர் | பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை | பெற்ற வாக்குகளின் சதவீதம் |
|---|---|---|---|
| குடியரசுக் கட்சி | டொனால்ட் டிரம்ப் | 75,894,168 | 50.2% |
| ஜனநாயகக் கட்சி | கமலா ஹரிஸ் | 72,881,845 | 48.2% |
| பசுமைக் கட்சி | Jill Stein | 742,775 | 0.5% |
| சுயேட்சை வேட்பாளர் | Robert Kennedy | 718,287 | 0.5% |
| சுதந்திரக் கட்சி | Chase Oliver | 627,613 | 0.4% |
| ஏனைய எல்லா வேட்பாளர்களும் சேர்ந்து பெற்றது | | 373,698 | 0.2% |

அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்யா விட்டாலும் வென்ற அதிபருக்கு நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் வாக்களித் திருப்பது ஊடகங்களால் ஒரு நேர்மறைச் செய்தியாகவே கணிக்கப்படும்.

இதனால், மிகவும் அதிகப்படியான தெரிவாளர்களால் (312) தெரிவு செய்யப் படுவதாலும், நாடு தழுவிய வாக்குகளில் பெரும்பான்மை வாக்குகளைப் (50.2%) பெற்றிருப்பதாலும் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்ப் தீர்க்கமான வெற்றி (Decisive Victory) பெற்றுள்ளார் என உலகளாவிய ஊடகங்களால் அவர் பெருமைப்படுத்தப்படுகிறார்.

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் தெரிவு செய்யப்பட்டு விட்டார் என ஊடகங்கள் அறிவித்தவுடன் நொவெம்பர் 6ஆம் திகதி அதிகாலை டொனால்ட் டிரம்ப், புளோரிடாவின் West Palm Beach மாநாட்டு மையத்தில் தனது ஆதரவாளர் முன்னிலையில் வெற்றி உரை நிகழ்த்தினார்.

"உங்களது 47ஆவது மற்றும் 45ஆவது அதிபராகவும் தெரிவு செய்யப்பட்டமைக் காக மிகவும் அரிதான இந்தக்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்















GTA Square, 5215 Finch Ave. E., #201, Toronto, ON M1S 0C2, Canada. Tel: 416.282.8059 | Fax: 416.286.0334, Email: vlambaram@sympatico.ca, info@vlambaram.com. Web: www.vlambaram.com

# NEW INDUSTRIAL / OFFICE BUILDING

## *Mostly Anticipated New Project in Scarborough*

on

## 2711 Markham Road

## @ Nashdene




*For further Info :*

**Please Call : 416 321 6969**

Raja Mahendran
Broker / Owner
raja@mahendran.ca

Gulshan Sharma
Broker
gksharmaca@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ட்ரம்ப் – அனுர உறவுக்கு வந்துள்ள சிக்கல்

## – அரவின் –

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் பரபரப்புகளுக்கு மத்தியில், ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி அமெரிக்க தூதரகத்தினால் வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அறுகம்குடாவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து, குறிப்பாக இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என்றும், முன்னெச்சரிக்கையாக அமெரிக்க மக்கள் அங்கிருந்து வெளியேறுமாறும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டிருந்தது.

தாக்குதல் அச்சுறுத்தல் குறித்து நம்பகமான தகவல்கள் கிடைத்திருப்பதாக அமெரிக்க தூதரகம் சுட்டிக்காட்டியிருந்தது.

அதைத்தொடர்ந்து, பிரித்தானியா, கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தமது மக்களை அறுகம்குடாவில் இருந்து வெளியேறுமாறு அறிவித்தன.

தனது நாட்டவர்களை உடனடியாக நாடு திரும்புமாறு இஸ்ரேல் அறிவித்தது.

இந்த அறிவிப்பு இலங்கை அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படாத ஒன்று.

ஏனென்றால், இலங்கைக்கு இப்போது வெளிநாட்டு நாணய உழைப்பை வழங்கிக் கொண்டிருப்பது, சுற்றுலாத்துறைதான்.

இந்த ஆண்டில் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வந்து சுமார் 3 பில்லியன் டொலர்களை திரட்ட முடியும் என்ற நம்பிக்கையில் அரசாங்கம் இருந்தது.

ஏற்கனவே, சுமார் 16 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருந்த நிலையில், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதால், அரசாங்கத்தினால் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

இது குறித்து அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எவ்பிஐ ஏற்கனவே இலங்கையின் அரச புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் வழங்கியிருந்தது.

ஆனால், அதன் அடிப்படையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் தான், அமெரிக்கா இந்த அறிவிப்பை வெளியிட்டது.



அதேபோல, இந்திய புலனாய்வு அமைப்பும் கூட, இதுபற்றிய தகவல்களை வழங்கியிருந்தன. அதன் அடிப்படையிலேயே ஆறு பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இது ஏற்கனவே வெளியாகிய தகவல். இப்போது இன்னொரு அதிர்ச்சியான விடயம் வெளியாகியிருக்கிறது.

டொனால்ட் ட்ரம்பை படுகொலை செய்வதற்கு உத்தரவிடப்பட்டிருந்தவருக்குத்தான், அறுகம்குடாவில் தாக்குதல் நடத்துவதற்கான பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருந்ததாக, அமெரிக்க நீதித் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

ஈரானின் புரட்சிகர காவல்படையைச் சேர்ந்த பர்ஹாட் ஷகேரி என்ற 51 வயதுடைய அந்த நபர்மீது, அமெரிக்காவில் குற்றவியல் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

அவருக்கும் இலங்கையில் இஸ்ரேலியர்கள் மீது நடத்தத் திட்டமிடப்பட்ட தாக்குதலுக்கும், இருக்கின்ற தொடர்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏனென்றால், அமெரிக்காவிலும், இலங்கையிலும் தேர்தல் நடக்கப்போகும் வேளையில்தான், இந்தத் தாக்குதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன அல்லது மேற்கொள்ளப்படவிருந்தன.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையில் இருக்கின்ற தொடர்பு, அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் இருக்கின்ற பகைமை, இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் உள்ள நெருக்கம் என, பல கோணங்களில் இந்த விவகாரத்தைப் பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே சீரான உறவுகள் இருந்ததில்லை. அவ்வப்போது அது மாறுபாடானதாக இருந்து வந்திருக்கிறது.

2015இல் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா முயற்சித்ததாக மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியிருந்தார். பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டுகளும் இருந்தன.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

கொழும்பு மேற்கு கொள்கலன் முனையத்தில், அமெரிக்கா சுமார் 500 மில்லியன் டொலரை முதலீடு செய்யும் அளவிற்கு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

இப்போது கொழும்பில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள சூழலில், அமெரிக்காவிலும் ஆட்சி மாற்றம் நிகழ்ந்திருக்கிறது.

இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றம், அமெரிக்காவுக்கு ஏற்புடைய ஒன்றா அல்லது அது விரும்பாத ஒன்றா என்பதை இன்னமும் சரியாகக் கணிக்க முடியாத நிலை இருக்கிறது.

ஆனால், இலங்கையை அமெரிக்கா தனது கைக்குள் வைத்திருப்பதற்கு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வந்த சூழலில், ட்ரம்ப் ஆட்சி அமைக்கவிருப்பது புதியதொரு சூழலை உருவாக்கியிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில்தான், டொனால்ட் ட்ரம்ப்பைப் படுகொலை செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டவரே, அறுகம்குடாவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார் என அமெரிக்கா கூறியிருக்கிறது.

குற்றம்சாட்டப்பட்டவர் அமெரிக்காவுக்கு சவாலாக உள்ள நாடுகளில் ஒன்றான, ஈரானின் புரட்சிகர காவல்படையைச் சேர்ந்தவர்.

அமெரிக்கா விரோதியாகப் பார்க்கும் ஈரானுக்கும், இலங்கைக்கும் இடையே நெருங்கிய நட்புறவு காணப்படுகிறது.

அமெரிக்காவின் தடைகளையும் தாண்டி, ஈரானும் இலங்கையும் தேயிலை, எண்ணெய் போன்ற வர்த்தகங்களில் ஈடுபட்டு வருகின்றன.சர்வதேச ரீதியாக, இலங்கையின்மீது அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுத்த போதெல்லாம், எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியாக, ஈரான் அதற்கு எதிராக நின்றது.

அப்படிப்பட்ட ஈரானைச் சேர்ந்த ஒருவர், இலங்கையில் தாக்குதல் நடத்தச் சதி செய்தார் என்பது, ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் விரிசலை ஏற்படுத்தக்கூடியது.

இலங்கைக்குவரும் இஸ்ரேலியர்களில் பெரும்பாலானோர் அந்த நாட்டின் படையினர் எனக் கூறப்படுகிறது.

இப்படிப்பட்ட நிலையில், அவர்களை இலக்கு வைத்து அறுகம்குடாவில் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால், மத்திய கிழக்கில் இப்போது நடந்து கொண்டிருக்கின்ற போர், இலங்கைக்கும் விரிவடையக்கூடிய ஆபத்து இருந்தது.

இஸ்ரேலியர்கள் தாக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டிருந்தால், அவர்கள் தமது முழு அளவிலான எதிர்ப்பு நடவடிக்கைகளை இலங்கையிலும் முன்னெடுக்கத் தயாராவர்.

அப்படி ஒரு நிலை ஏற்படுமேயானால், இங்குள்ள ஈரானிய இலக்குகளும் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடும்.

ஏற்கனவே பலநாடுகளில் இஸ்ரேல் தனது கைவரிசையைக் காட்டி வந்திருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு சிக்கலான நிலையை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு ஈரான் திட்டமிட்டது உண்மையானால், இலங்கை பொறிக்குள் தள்ளப்படும் ஆபத்தில் இருக்கிறது என்றே அர்த்தம்.

இப்போதும்கூட இந்த விவகாரத்தை வைத்து, அமெரிக்கா - ஈரான் - இலங்கை என, ஒரு முக்கோணத்தில் பிரச்சினைகள் தீவிரப்படுத்தப்படும் சாத்தியங்கள் உள்ளன.

குறிப்பாக தன்னைப் படுகொலை செய்வதற்கு முயற்சித்த நாட்டின்மீது, ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ட்ரம்ப் எத்தகைய நடவடிக்கையை எடுப்பார் என்று இப்போது கணிக்க முடியாது.

ஆனால் இது வில்லங்கமான சூழலை இலங்கைக்கு ஏற்படுத்தக்கூடும். ஏற்கனவே இலங்கையில் ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி, அமெரிக்காவுக்கு விரோதமான இடதுசாரிக் கொள்கையை கடைப்பிடிக்கின்ற சூழலில், தீவிர வலதுசாரியான டொனால்ட் ட்ரம்ப், இந்த விவகாரங்களை எவ்வாறு கையாளுவார் என்று பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் ட்ரம்ப்பும், அனுர குமாரவும், எவ்வாறு ஒத்திசைந்து செல்லப் போகிறனர் என்பது கேள்விக்குரிய விடயமாக இருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறப்போகும் தரப்பு எதுவாக இருந்தாலும், ஆட்சி அமைப்பது யாராக இருந்தாலும், அமெரிக்கா - ஈரான் போன்ற சர்வதேச விவகாரங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய சிக்கல் நீடிக்கத்தான் போகிறது.


விளம்பரம்
VLAMBARAM™
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved



உனக்கு மன அமைதி வேண்டுமானால் யாருடைய குறையையும் காணாதே.
விவேகானந்தர்

# மீண்டும்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கௌரவத்திற்காக அமெரிக்க மக்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஒவ்வொரு குடிமகனுக்கும் நன்றி கூற விரும்புகிறேன். நான் உங்களுக் காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும், எதிர்காலத்திற்காகவும் போராடுவேன். ஒவ்வொரு நாளும் நான் உங்களுக்காகப் போராடுவேன். என் உடம்பில் சுவாசம் உள்ளவரை எங்கள் குழந்தைகளுக்குத் தகுதியான, மற்றும் உங்களுக்குத் தகுதி

| No. | Jurisdiction | Electoral Votes |
|---|---|---|
| 1 | Alabama | 9 |
| 2 | Alaska | 3 |
| 3 | Arizona | 11 |
| 4 | Arkansas | 6 |
| 5 | California | 54 |
| 6 | Colorado | 10 |
| 7 | Connecticut | 7 |
| 8 | Delaware | 3 |
| 9 | District of Columbia | 3 |
| 10 | Florida | 30 |
| 11 | Georgia | 16 |
| 12 | Hawaii | 4 |
| 13 | Idaho | 4 |
| 14 | Illinois | 19 |
| 15 | Indiana | 11 |
| 16 | Iowa | 6 |
| 17 | Kansas | 6 |
| 18 | Kentucky | 8 |
| 19 | Louisiana | 8 |
| 20 | Maine | 4 |
| 21 | Maryland | 10 |
| 22 | Massachusetts | 11 |
| 23 | Michigan | 15 |
| 24 | Minnesota | 10 |
| 25 | Mississippi | 6 |
| 26 | Missouri | 10 |
| 27 | Montana | 4 |
| 28 | Nebraska | 5 |
| 29 | Nevada | 6 |
| 30 | New Hampshire | 4 |
| 31 | New Jersey | 14 |
| 32 | New Mexico | 5 |
| 33 | New York | 28 |
| 34 | North Carolina | 16 |
| 35 | North Dakota | 3 |
| 36 | Ohio | 17 |
| 37 | Oklahoma | 7 |
| 38 | Oregon | 8 |
| 39 | Pennsylvania | 19 |
| 40 | Rhode Island | 4 |
| 41 | South Carolina | 9 |
| 42 | South Dakota | 3 |
| 43 | Tennessee | 11 |
| 44 | Texas | 40 |
| 45 | Utah | 6 |
| 46 | Vermont | 3 |
| 47 | Virginia | 13 |
| 48 | Washington | 12 |
| 49 | West Virginia | 4 |
| 50 | Wisconsin | 10 |
| 51 | Wyoming | 3 |
| | Total | 538 |

யான வலுவான பாதுகாப்பான மற்றும் வளமான அமெரிக்காவை நாங்கள் வழங்கும்வரை நான் ஓய்வு எடுக்க மாட்டேன். இது உண்மையிலேயே அமெரிக்காவின் பொற்காலமாக இருக்கும். இந்த வெற்றி அமெரிக்க மக்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும். இது அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக மாற்ற (Make America Great Again) அனுமதிக்கும். எமது நாட்டிற்கு மிகவும் அவசியமாக உதவி தேவைப்படுகிறது. நமது நாடு நலம்பெற நாம் உதவுவோம். நாங்கள் முதலில் எமது எல்லைகளைச் சரி செய்யப் போகிறோம். இன்று நாங்கள் ஒரு காரணத்திற்காகவே வரலாறு படைத்துள்ளோம்.



Donald Trump and JD Vance Thanks: Wikipedia

கடவுள் ஒரு காரணத்திற்காகத்தான் எனது உயிரைக் காப்பாற்றினார் என்று பலரும் என்னிடம் கூறினர். அந்தக் காரணம் எமது நாட்டைக் காப்பாற்றவும், அமெரிக்க மகத்துவத்தை மீட்டெடுக்கவும்தான். இப்போது நாம் அந்தப் பணியை நிறை வேற்றப் போகிறோம்.

உங்களுக்குத் தெரியும் நாங்கள் பொது அறிவுடன் செயற்படும் கட்சி என்று. நாங்கள் பாதுகாப்பான எல்லைகளைக் கொண்டிருக்க விரும்புகிறோம். எங்களுக் குச் சிறந்த கல்வி வேண்டும். வலிமை யான மற்றும் சக்திவாய்ந்த இராணுவம் வேண்டும். ஆனால், அந்த இராணுவத்தை நாம் பயன்படுத்தத் தேவையில்லை. உங்களுக்குத் தெரியும், எமது ஆட்சியில் போர்கள் இல்லை. நாம் ஆண்ட அந்த நான்கு ஆண்டுகளிலும் ஒரு போரும் நடைபெறவில்லை. நாங்கள் ISISஐ சாதனை நேரத்தில் தோற்கடித்தோம்.

நான் போர் தொடங்குவேன் என்று அவர்கள் கூறினர். ஆனால், நான் போரைத் தொடங்கப் போவது இல்லை. நான் போர்களை நிறுத்தப் போகிறேன். எமக்குக் கிடைத்தது, ஜனநாயகத்திற்கும், சுதந்திரத்திற்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து அமெரிக்காவின் புகழ்பெற்ற விதியை மீட்கப் போகிறோம். (Unlock America's Glorious Destiny).

உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? நாங்கள் 900இற்கு மேற்பட்ட பேரணிகளை (Rallies) நடத்தியிருக்கிறோம். இனிமேல் பேரணிகள் தேவையில்லை. அமெரிக் காவை மீண்டும் பாதுகாப்பான, வலிமை யான, வளமான, சக்திவாய்ந்த மற்றும் சுதந்திரமான நாடாக மாற்றுவோம். இந்த உன்னதமான மற்றும் நேர்மையான முயற்சியில் என்னுடன் இணையுமாறு எங்கள் நிலத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனையும் நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எனக்குத் தந்திருப்பது எவ்வளவு பெரிய மரியாதை (Great honour) என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் உங்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். நான் உங்களைக் கைவிட மாட்டேன். அமெரிக்காவின் எதிர்



President-elect Donald Trump with former first lady Melania Trump
Thanks: USA Today

காலம் முன்பு இருந்ததைவிட சிறப்பாக வும், பெரியதாகவும், தைரியமானதாகவும், பணம் அதிகமுடையதாகவும், பாதுகாப் பானதாகவும் மற்றும் வலிமையானதாக வும் இருக்கும். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்! கடவுள் அமெரிக்காவை ஆசீர்வதிப்பார்! உங்களுக்கு மிகவும் நன்றி, நன்றி, நன்றி!!!" என அவரது 30 நிமிடங்கள் வரை நடைபெற்ற வெற்றி உரையில் கூறினார்.

நொவெம்பர் 5ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெற்ற தேர்தலில் அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்வதைவிட மற்றும் பல தேர்தல்கள் நடைபெற்றன.

அமெரிக்க நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களது (House of Representatives) பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள். அமெரிக்க நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை 435. இவர்களுக்கான தேர்தலும் அன்று நடைபெற்றது. நொவெம்பர் 14ஆம் திகதிவரை வந்த முடிவுகளின்படி கட்சியின் நிலை பின்வருமாறு:

குடியரசுக்கட்சிக்கு 218 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜனநாயகக்கட்சிக்கு 209 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இன்னும் 08 தொகுதிகளுக்கான முடிவுகள் வெளியாகவில்லை. நாடாளுமன்றத்தின் மக்களவையில் பெரும்பான்மையைப் பெற ஒரு கட்சி குறைந்தது 218 ஆசனங் களைப் பெறவேண்டும். குடிரயசுக்கட்சி ஏற்கனவே 218 ஆசனங்களைப் பெற்றுள்ளபடியால் அது நாடாளு மன்றத்தின் மக்கள் அவையில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுகிறது.

அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபை உறுப்பினர்களது பதவிக்காலம் ஆறு ஆண்டுகள். ஆனால், இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஒவ்வொரு தேர்தலிலும் தெரிவு செய்யப்படுவர்.



(இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை) அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபை உறுப்பினர்களது எண்ணிக்கை 100. நொவெம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் 34 பேர் தெரிவு செய்யப்பட்டனர். நொவெம்பர் 14ஆம் திகதிவரை வந்த முடிவுகளின்படி தற்போது மேற்சபையில் உள்ள முந்தைய மூன்றில் இரண்டு பங்கினர் உட்பட கட்சிகளின் நிலை பின்வருமாறு:

குடிரயசுக்கட்சி 53 உறுப்பினர்கள்
ஜனநாயகக்கட்சி 45 உறுப்பினர்கள்
ஜனநாயகக்கட்சி ஆதரவு சுயேட்சை 2 உறுப்பினர்கள்

நாடாளுமன்ற மேற்சபையில் பெரும் பான்மையைப் பெற 51 உறுப்பினர்கள் வேண்டும். ஏற்கனவே, 53 உறுப்பினர் களை குடியரசுக்கட்சி பெற்றுள்ளதால் குடியரசுக்கட்சி நாடாளுமன்றத்தின் மேற் சபையில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.




A girl runs with a Trump flag outside the Palm Beach County Convention Center
Thanks: USA Today

அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்களில் 11 மாநிலங்களுக்கான ஆளுநர் (Governor) தெரிவு நொவெம்பர் 5ஆம் திகதி நடைபெற்றது. ஏற்கனவே உள்ள ஆளுநர்களுடன் தெரிவு செய்யப்பட்ட ஆளுநர்களையும் சேர்த்து தற்போது 27 மாநிலங்களில் குடியரசுக்கட்சியைச் சேர்ந்த ஆளுநர் இருக்கின்றனர். 23 மாநிலங்களில் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த ஆளுநர் இருக்கின்றனர்.

அமெரிக்க நாடாளுமன்ற, மக்கள் அவையிலும், மேற்சபையிலும் குடியரசுக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதால் குடியரசுக்கட்சியைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட அதிபர் டொனால்ட் டிரம்ப்இற்கு அடுத்த இரண்டு ஆண்டு களுக்கு புதிய சட்டமூலங்களை இயற்றவும், ஆட்சி செய்யவும் சிரமங்கள் இருக்கமாட்டாது.


MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340 .9490 / 416.732.2228

Mr.S.F.Xavier (Teacher)

# ஒற்றையாட்சியா– சமஷ்டி ஆட்சியா?

– முகிலன் –

இந்த நாடாளுமன்றத் தேர்தலில், இலங்கை தமிழரசு கட்சியும் அகில இலங்கை தமிழ் காங்கிரசும், புதிய அரசமைப்பு உருவாக்கத்தை பிரதான பிரச்சாரப் பொருளாக எடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் எனக் கூறியிருந்தார்.

அனைத்து மக்களும் சமமாக மதிக்கப் படக்கூடிய அந்த புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை, ஏற்கனவே நல்லாட்சி அரசின் காலத்தில் தயாரிக்கப் பட்ட அரசமைப்பு வரைவில் இருந்து, தொடங்கத் திட்டமிட்டிருப்பதாகவும், அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார்.

அவர் அந்த வாக்குறுதிப்படி செயற்படு வாரேயானால், புதிய நாடாளுமன்றம் அமைந்ததும், அரசமைப்பு மாற்ற முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

ஆனால், அதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம், நாடாளு மன்றத்தில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்க வேண்டும். அல்லது ஏனைய கட்சிகளின் உதவியைப் பெற்று புதிய அரசமைப்பைக் கொண்டுவர வேண்டும்.

அண்மையில் புதிய அரசமைப்பு தொடர் பாகக் கருத்து வெளியிட்டுள்ள அனுர குமார திசாநாயக்க, ஏற்கனவே சோல்பெரி, டொனமூர் அரசியல் யாப்பு களும் சரி, 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்பும் சரி, 1977ஆம் ஆண்டின் அரசியல் யாப்பும் சரி, மக்களின் ஆணையைப் பெற்றவை அல்ல எனக் குறிப்பிட்டிருந்தார்.

சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் அங்கீகரிக் கப்பட்டதாக, எந்தவொரு அரசியல் யாப்பும் இலங்கையில் நடைமுறைக்கு வரவில்லை.

அதனைக் கருத்தில் கொண்டுதான், புதிய அரசமைப்பு மக்களின் ஆணையைப் பெற்றதாக இருக்கும் என்று அவர் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இது சிக்கலான - சிரமமான ஒரு முயற்சி.

கடந்த காலங்களில் இலங்கையின் அரசமைப்புகளில் திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டபோது, ஜே.ஆர். ஜெயவர்த்தன தொடக்கம் ரணில் விக்கிரம சிங்க வரையிலான ஆட்சியாளர்கள் அனைவருமே, எந்தவொரு சந்தர்ப்பத் திலும், சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்வதற்கு விரும்பியதில்லை.

அரசமைப்பு திருத்தங்களின்போது, உயர் நீதிமன்றம் அவ்வாறான தீர்ப்புகளை வழங்கிய சந்தர்ப்பங்களில், சிக்கலான விடயங்களைத் தவிர்த்து அல்லது திருத்தங்களைச் செய்து சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாமல் நாடாளு மன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடன் அவற்றை நிறைவேற்றி வந்திருக்கின்றனர்.



நாடாளுமன்றத்தில் மிகப் பலமான நிலையில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ போன்றோர்கூட, சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்லத் தயங்கினர்.

ஏனென்றால் சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்லுகின்றபோது, பல்வேறு சிக்கல் களை எதிர்கொள்ள நேரிடும். அரசாங்கம் விரும்பிய மாற்றங்களைச் செய்ய முடியாமல் போகலாம். அல்லது அது மக்களால் நிராகரிக்கப்படலாம்.

அது அரசாங்கத்துக்குத் தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்தும்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய, அனைத்து மக்களும் சமத்துவமாக நடத்தப்படக்கூடிய ஓர் அரசமைப்பைக் கொண்டுவர உள்ளதாகக் கூறுகிறது.

ஆனால் அதை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அங்கீகரிப்பது என்பது மிகவும் சிக்கலானது.

தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கின்ற வகையிலோ அல்லது அவர்களை சமமாக, சமத்துவமாக நடத்தக்கூடிய வகையிலோ புதிய அரசமைப்பு இருப்பதற்கு சாத்தியப்பாட்டை இது இல்லாமல் செய்து விடும்.

ஏற்கனவே, தமிழ் மக்களுக்கு அதிகாரங் கள் அவசியமில்லை, அதிகாரப்பகிர்வு தேவையில்லை, 13ஆவது திருத்தம் தேவையில்லை என்றெல்லாம் ஜேவிபி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருக்கிறார்.

இப்படிப்பட்ட நிலையில், புதிய அரச அமைப்பில் தமிழ் மக்களுக்கு அதிகாரங் களைப் பகிர்வதற்கு அல்லது கொடுப் பதற்கு அனுர குமார அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது.

அப்படிக் கொடுப்பதற்கு முன்வரும் விடயங்களைக்கூட, சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ற கேள்வி இருக்கிறது.

சிங்கள மக்கள் நாட்டில் பெரும்பான்மை யானவர்கள். அவர்கள் விரும்பாத ஒன்றை தமிழருக்குத் தீர்வாக வழங்க முடியாது.

அதேவேளை, தமிழர் தாங்கள் விரும்பாத ஒன்றைத் தீர்வாக ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

இப்படிப்பட்ட சிக்கலான ஒரு சூழலில், அனுர குமார அரசாங்கம், சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக, புதிய அரசமைப்பை நிறைவேற்றும் முயற்சி களை முன்னெடுக்குமானால், அது வெற்றிபெறக்கூடிய ஒன்றாக இருப்பதற்குச் சாத்தியம் இல்லை.

சிலர் தற்போது நாட்டில் இனவாதம் இல்லை என்று கூறிக்கொண்டாலும், ஒவ்வொரு கட்டத்திலும் அந்த இனவாதம் ஊறிப்போய் இருக்கிறது. அதை இலகுவில் யாரும் இல்லாமல் செய்துவிட முடியாது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து விட்டது என்பதால் முழுமையாக சிங்கள மக்கள் மாறிவிட்டனர் என்றோ, தமிழருக்கு எதிரான அல்லது விரோதமான போக்கில் இருந்து விலகி விட்டனர் என்றோ கருத முடியாது. அப்படிக் கருதுவது முட்டாள்தனம்.

இப்படியான நிலையில், புதிய அரசமைப்பு நியாயமானதாகக் கொண்டு வரப்பட்டா லும், அது நிறைவேற்றப்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

இப்படிப்பட்ட நிலையில், தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரனுக்கும், தமிழ் காங்கிரசின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் இடையில் இந்த அரசமைப்பு சார்ந்த கருத்து மோதல்கள் தேர்தல் பிரச்சாரங் களின்போது வெளிப்படுத்தப்பட்டன.

அனுர குமார அரசாங்கம் அரசமைப்பு மாற்றத்தைக் கொண்டுவரும்போது, நல்லாட்சி அரசாங்கத்தில் இதனைக் கவனித்த தாங்கள், மீண்டும் நாடாளு மன்றத்தில் இருக்க வேண்டும், அப்போது தான், அதனைச் சரியான முறையில் கொண்டுசெல்ல முடியும் என சுமந்திரன் கூறியிருந்தார், இதேபோன்ற கருத்தை மனோ கணேசனும் முன் வைத்திருக்கிறார்.

அதாவது புதிய நாடாளுமன்றத்துக்கு நாங்கள் தெரிவு செய்யப்பட்டே ஆக வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில்தான், அவர்களால் இந்தக் கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

அதேவேளை, தமிழ் மக்களுக்கு எதிரான, ஒற்றையாட்சி அரசமைப்பு உருவாக்கப்படு வதைத் தடுப்பதற்கு, தம்மில், 10 பேரை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்ய வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தி இருக்கிறார்

சுமந்திரன் தேர்தல் காலகட்டத்தில் சமஷ்டி பற்றிப் பேசினாலும் - நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ‘ஏக்கிய ராஜ்ய’ எனப்படும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை, உருவாக்குவதற்குத் துணை போயிருந்தார்.

ஆனால், அதில் சமஷ்டிப் பண்புகள் இருப்பதாக அவர் ஊடகங்களுக்குக் கூறிக் கொண்டே இருந்தார். இப்போதும் அவ்வாறுதான் கூறுகிறார்.

ஆனால், இலங்கையில் சமஷ்டி அரசமைப்புக்கு வாய்ப்பே இல்லை என, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது.

ஒற்றையாட்சி அரசமைப்புத்தான் வரப் போகிறது, என்பது உறுதியாகியுள்ள நிலையில், அதனைத் தடுப்பதற்கு தங்களுக்குப் பலம் கொடுங்கள் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டு கோள் விடுத்திருக்கிறார்.

புதிய அரசமைப்பைத் தடுப்பதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேட்கின்ற பத்து ஆசனங்கள் மாத்திரம் போதாது.

அதேவேளை, சுமந்திரன் எதிர்பார்ப்பது போல, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசமைப்பு விடயத்தில் சாதகமான போக்கைக் கொண்டிருக்கும் எனவும் எதிர்பார்க்க முடியாது.

ஒற்றையாட்சி அரசமைப்பை அவர், சமஷ்டி என்று தமிழ் மக்களுக்குக் காண்பிக்க முற்படுகிறார்.

ஒற்றையாட்சி அரசமைப்புக்கு ஆதரவு கேட்கும் சுமந்திரனும், சமஸ்டி ஆட்சி முறைக்கு ஆதரவு கேட்கும் கஜேந்திர குமார் பொன்னம்பலமும், மக்களின் ஆணையை எதிர்பார்த்து இருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழ் மக்கள் ஒற்றை யாட்சி அரசமைப்புக்கு முண்டு கொடுக்க நிற்கும் சுமந்திரனை ஆதரிக்கப் போகிறார்களா? அல்லது ஒற்றையாட்சி அமைப்பைத் தடுப்பதற்கு அவர்கள் துணை நிற்கப் போகிறார்களா?


தமிழர் பாரம்பரிய பலகாரங்கள்

விசேட வைபவங்களுக்கான லட்டு, கேசரி, தொதல், அச்சுப் பலகாரம், அரியதரம், பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகை களைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

778.846.5460/416.287.8167



# தமிழரின் வாழ்விடங்களும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

## கடந்த இதழ் தொடர்ச்சி...

### கொழும்புத் தமிழர் கல்வி தொடர்ச்சி...

கொழும்பு மாநகரில் இலங்கைத் தமிழர் குடியிருப்பும், வாழ்வும் வளர்ச்சியும், கல்வி, தொழில் முன்னேற்றங்களும் பல கட்டங்களில் நிகழ்ந்து வந்துள்ளன.

**1) 1920-1956-** அதிக சொத்துக்களும், உயர் கல்வியும், உயர் பதவியும் கொண்ட தமிழர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்று வாழ்ந்தனர். வழக்கறிஞர்களும், நிர்வாக அரசதுறை அதிகாரிகளும், பெரு வணிகர்களும், மலேஷியா, சிங்கப்பூர் நாடுகளின் தொடர்புகளைக் கொண்டவர்களுமான யாழ்ப்பாண, மட்டக்களப்பு தமிழர் அதிகம் வாழ்ந்தனர். இவர்களில் பலர் முதன்முதலில் பிரித்தானியாவில் கல்வி கற்கப் பயணம் செய்தோராக இருந்தனர்.

தீவகத்திலிருந்து இடைநிலைக்கல்வியோடு பல இளைஞர்கள் கொழும்பில் பலமாக செயற்பட்டு வந்த இந்திய வியாபாரிகளின் கடைகளில் சிப்பந்திகளாகப் பணியாற்றத் தொடங்கினர். பின்பு இவர்களே தமது கடின உழைப்பு, நேர்மை, திறமை காரணமாக பெரிய வணிகர்களாக செயற்படலாயினர்.

**2) 1957-1983 -** 1956இல் SWRD பண்டார நாயக்காவின் அரசாங்கம் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியது. இக்காலத்தில் (1956) அரச குடியியல் உயர் சேவையில் (CAS) தமிழர் 30% பதவி வகித்தனர். எழுதுவினைஞர்கள் அரச சேவைகளில் 50% பதவி வகித்தனர். பொறியியலாளர் மற்றும் வைத்தியர்களில் 60% பதவி வகித்தனர். இராணுவ சேவை களில் 40% பதவி வகித்தனர். இது தனிச் சிங்களச் சட்டத்தால் கடுமையாக ஒடுக்கப்பட்டது.



1970 காலப்பகுதியில் அரச சேவைகளில் தமிழர் ஐந்து சதவீதத்துக்குக் குறைக்கப் பட்டனர். எழுதுவினைஞர்களும் இதே போல் ஐந்து சதவீதமாகக் குறைக்கப் பட்டனர். மருத்துவர்கள் மற்றும் பொறியியலாளர்கள் பத்து சதவீதமாகினர். இராணுவ சேவையில் ஒரு சதவீதமாகினர்.

தனிச் சிங்களச் சட்டம் தமிழரது உயர் தொழில்ரீதியிலான மேலாண்மையிலும் 1971இல் உயர்கல்வியில் தரப்படுத்தும் கொள்கை, பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்பிலும் மிகப் பெரிய வரலாற்றுச் சேதங்களை ஏற்படுத்திவிட்டது.

1983 இனக் கலவரங்களின் பறிப்பு புலம் பெயர்வுக்குரிய சமூகத் தூண்டுதலை அதிக வேகத்துடன், வலுவாக ஏற்படுத்தி விட்டது. அரசாங்கங்களே முன்னெடுத்த இனவிரோதக் கொள்கைகளும், செயற் பாடுகளும், இதே தமிழரது தலைமுறையினரை வடஅமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் உலகத் தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களில், அதிநவீன படிப்புகளில் உயர் பட்டங்கள் பெறும் வாய்ப்புக்களை உருவாக்கப் போகின்றது என சிங்கள இனத் தலைவர்கள் கற்பனை கூடச் செய்திருக்கவில்லை.

**3. 1984-2009 -** இக்காலப்பகுதி தமிழர் அதிக பயத்துடனும், உள்ளே அடங்கிய பாதுகாப்பின்மை உணர்வுடனும் கொழும்புப் பகுதிகளில் வாழ்ந்தனர். பொலிஸ் நிலையங்களில் தம்மைப் பதிவு செய்தல், அடிக்கடி இராணுவ சோதனைக்கு உட்படுதல், அதிக பண உழைப்பை விரயமாக்குதல், வெளிநாட்டு குடும்ப உறுப்பினர் உழைப்பை கொழும்பு நகரில் தொடர் மாடித் தொகுப்பு வீடுகளில் முதலீடு செய்தல், தனியார் ரியூசன் கட்டணமாக அதிக பணம் செலவிடுதல் போன்ற வித்தியாசமான வாழ்க்கை முறைக்குள் சிக்கித் தவித்தனர்.

வெளிநாட்டுக்குக் குடிபெயர்வதற்காகக் காத்திருப்பது, அதற்கான தங்குமிடமாகவும் கொழும்பு மாநகரம் தமிழருக்கு முக்கியமானதாயிருந்தது.

தமிழ்ப்பாடசாலைகளில் அசாதாரணமாக மாணவர்கள் குவிந்த காலம் இதுவே. இடம் பெயர்ந்த ஏராளமான ஆசிரியர்களும் இங்கே குவிந்திருந்தனர். இது புதிய கல்விசார் குடித்தொகை வீக்கத்தை உருவாக்கியிருந்தது. 1984இன் முன்போ, 2009இன் பின்போ இத்தகைய அசாதாரண மக்கள் அசைவியக்கத்தைக் காணவே முடியவில்லை.

இதற்கிடையில் 1987இல் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் தமிழ்மொழியும் அரச மொழியாக அங்கீகாரம் பெற்ற வரலாற்று நிகழ்வும் இடம் பெற்றது. 2009இல் யுத்தம் முடிவுக்கு வருகிறது. 1971இல் அறிமுகமான தரப்படுத்தல் முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் கொண்டு வந்து தமிழ் இளைஞர்களையும், தமிழ்க் குடும்பங்களையும் நிறுத்தியது.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன் கல்வி கற்றோருக்கான வாக்குரிமை முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைவர் சேர். பொன். இராமநாதன் கண்டியில் இடம்பெற்ற சிங்கள - முஸ்லீம் கலவரங்களின் பின்னணியில் சிங்களத் தலைவர்கள் பலரை விடுவித்தவர் இவர். இங்கிலாந்து சென்று இவர்களது விடுதலைக்காக வாதாடினார்; வெற்றிபெற்றார்.

ஆனால், 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின் சிங்களத் தலைவர்களிடம் அரசியல் அதிகாரம் செல்கின்றது. அவர்கள் அதீத சுயநலத்துடன் இனவாத அரசியலைக் கையில் எடுக்கின்றனர். சிங்கள மொழி மேலாண்மை, இனக் கலவரம், அமைதியின்மை, யுத்தம், புலம் பெயர்தல், அகதி வாழ்க்கை, சர்வதேச புலம்பெயர்தல் போன்ற பலவற்றினால் இலங்கையின் அரசியல், சமூக வரலாறு இழுத்துச் செல்லப்பட்டுவிட்டது.

**4. 2010-2024 -** யுத்தம் முடிந்து ஒன்றரை தசாப்தமாகிவிட்டது. ஆனால், இலங்கை அரசியல் பழைய இனவாத அரசியல் நெடியிலிருந்து விடுபட முடியவில்லை. பழையதை முதலீடாக்கிப் பயன்பெற முனைகிறது.

ரண்டி பொயாகொட(Randy Boyagoda. 2024: 04:27) குளோபல் அன்ட் மெயில் பத்திரிகையில் வெளிநாடுகளில் படிப்பது பற்றிய ஒரு நல்ல கட்டுரையை எழுதியிருந்தார். அவர் கனடாவின் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றுபவர். அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்திருந்தார். அவரது பார்வையில் இலங்கை "முரண்பாடு பற்றிய உயிர்த்துடிப்புள்ள நினைவுகளுடன் இந்த நாடு புலப்படுகிறது. பல தசாப்தங்களாக நீண்ட குடியியல் யுத்தம் இது. 2009இல் முடிவுற்றது; 2019இல் நிகழ்ந்த ஈஸ்ரர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்; 2022இல் இடம்பெற்ற போராட்டம் மற்றும் குழப்பம்; இதற்குக் காரணமாயிருந்த பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள்".

இன்றைய இலங்கையின் வாழ்வு இவற்றினால் வடிவமைக்கப்பட்டதாகவே கொள்ள வேண்டும். ஆனாலும், கல்வி கற்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் தனித்துவம் மிக்க பண்பாடு இப்போதும் நிலவுவதாக அவர் குறிப்பிடுகிறார். (Opinion, P8)

கொழும்பிலும் செல்வந்தர்கள், உயர் பதவிகளில் இருப்போர் சிறந்த உட்கட்டமைப்பும், தரமான கற்பித்தலும், மெச்சத்தக்க பண்பாட்டுச் சூழலும் கொண்டு செயல்படும் கல்வி நிறுவனங்களில் தம் பிள்ளைகளைக் கற்பிக்கின்றனர். தனிப்பட்ட அதிக செலவுகளைப் பெற்றோர் மேற்கொள்கின்றனர்.

மேட்டுக்குடியினராக வாழ்கின்ற வடகிழக்கு தமிழர், இந்திய வம்சாவழி வணிகர் குடும்பத் தமிழர், இஸ்லாமியத் தமிழர் போன்ற பலரும் இங்கு செழிப்பான கல்வியை அனுபவிக்கின்றனர்.

மறுபுறம் தாழ்ந்த வருமானம் பெறுகின்ற உடல் உழைப்பாளர்களான இதே வகுப்பினைச் சேர்ந்தவர்களது (வடகிழக்கு, இந்திய வம்சாவளி, இஸ்லாமிய) பிள்ளைகள் வசதிகள் குறைந்த, தரமற்ற கல்வியை வழங்கும், தீமைதரும் பண்பாட்டு பழக்கங்கள் ஓரளவு கொண்ட பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர்.

இத்தகைய இருவழி ஏற்பாடு - இரட்டைத் தன்மை என்பதை கல்வியில் தவிர்க்கவே முடிவதில்லை. அல்லது இத்தன்மை நிலைத்திருப்பது அமைப்பு ரீதியாக அனுமதிக்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் தமிழர் கொழும்பில் ஏற்பட்டு வந்த நவீன கல்வி மாற்றங்களில் பங்குகொண்டு வளர்ந்து வந்ததமையையும் மறுக்க முடியாது. பின்வரும் வகையிலான மாறுதல்கள் இக்காலப்பகுதியில் ஏற்பட்டிருந்தன.

* உலகமயமாதலில் உலகத்தரம் வாய்ந்த ஆங்கில மொழிமூலம் போதிக்கின்ற சர்வதேச பாடசாலைகள் இயங்குதல்.



* உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் - பல நாடுகளின் பல்கலைக் கழகங்கள் இயங்குதல்.
* தனிப்பட்ட செலவுகளில் தனியார் பல்கலைக்கழகங்கள் உயர்கல்வி வசதிகளை விரிவுப்படுத்துதல்.
* மருத்துவக் கல்வியை பெற்றோரது செலவில் படிப்பதற்கு உரியவாறு ரஷ்யா, சீனா, இந்தியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருத்தல்.
* உயர்கல்வி பெறவும், குடியுரிமை பெறவும் துணை செய்யும் சர்வதேச மொழிகளைக் கற்பிக்கும் கல்வி நிறுவனங்கள் பல வளர்ச்சி பெற்றிருத்தல்; பல தூதரகங்களும் இவற்றை முன்னெடுத்தல்.

இக்காலத்தில் வாழ்க்கைச் செலவு அசாதாரணமாக அதிகரித்துச் செல்கின்றது. வடக்கிலும், கிழக்கிலும் நிலைமை முன்னேற்றமடைகிறது. இதனால் குடித்தொகை நகர்வுகள் புதிய மாதிரியில் நிகழ்கின்றன.

1. முதியோர் பலரும் தமது பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களில் வாழ்வது சுலபமானதாக உணர்கின்றனர். இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தமது சொந்த ஊர்களுக்கே திரும்பும் போக்கு வளர்ச்சி பெறுகிறது.

2. இங்கு அகதிகளாக வெளிநாடுகளுக்குச் சென்றவர்களும் அங்கே குடியுரிமை பெற்ற அவர்களது பிள்ளைகளும் உல்லாசப் பயணிகளாக வருகின்றனர். அதிக அந்நியச்செலாவணியைக் கொண்டு வருகின்றனர். இதனால் கொழும்பில் நட்சத்திர ஹோட்டல்களில் தங்கும் தமிழரது தொகையும் அதிகரிக்கின்றது.

3. வெளிநாடுகளில் பொருளாதார வல்லமை பெற்ற தமிழர் கொழும்பில் பலதுறைகளில் முதலீடு செய்வோராக வளர்ச்சி பெறுகின்றனர்.

4. வெளிநாடுகளுக்குச் சென்று தம் குடும்பங்களுடன் இணைந்து கொள்ளும் நோக்கத்துடன், பல வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகக் கொழும்பில் தங்கியிருப்போர்களும் அதிகரிக்கின்றனர்.

இத்தகைய பலவகையிலான குடிபெயர்தல், கல்வி கற்றல் தொடர்பான முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவில் நிகழ்கின்றன.

(தொடரும்)

# நாமும் நமது இல்லமும் 666

# வாடகை வீடு மற்றும் சொந்த வீடு



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

## Renting Vs Owning

“நீங்கள் வாடகைக்குக் குடியிருப்பவராக இருந்தால் அது உங்கள் பணம் வெளியே எறிவதற்கு சமம்” என சிறுவயதில் கேள்விப்பட்டது நினைவிற்கு வருகின்றது. வாடகைக்கு இருப்போரும் சொந்தமாக ஆதனம், அடமானக்கடன் பெற்று வாங்குவோரும் வாடகைக்கு இருப்பவர்களே. இங்கு வாடகைக்கு இருப்போர் தாம் வாழும் இடத்தை வாடகைக்குப் பெறுகின்றனர். ஆனால், ஆதனம் வாங்குவோர், அடமானக் கடனிற்குரிய பணத்தை வாடகைக்குப் பெறுகின்றனர். இரண்டிற்கும் உள்ள பெரிய வித்தியாசம், ஆதனம் உரிமை கொள்வோர் ஆதனத்திற்குள் ஒரு செல்வத்தை உருவாக்குகின்றனர். (Equity)

அண்மையில் புள்ளியியல் கனடா (Statistics Canada) தனது அறிக்கையில் 35 வயதிற்கு உட்பட்ட நிரந்தரமான தொழிலில் இருப்போரின் நிகர பெறுமதியை வெளியிட்டது. இதில் சொந்தமாக ஆதனம் வைத்திருப்போரின் மத்திய பெறுமதி 2023ஆம் ஆண்டில் (Median Value) $457,100ஆகவும், வாடகைக்கு இருப்போரின் பெறுமதி $44,000ஆகவும் காணப்பட்டது. இதற்குக் காரணம் ஆதனத்தின் விலை அதிகரிப்பே ஆகும்.



ஆனால், அண்மைக்காலங்களில் ஏற்பட்ட ஆதன விலை அதிகரிப்பும் கடந்த இரு வருடங்களில் ஏற்பட்ட வட்டிவீத அதிகரிப்பும், 18 வயதிற்கும் 34 வயதிற்கும் இடைப்பட்டோர் ஆதனம் வாங்குவது என்பது இலகுவானதல்ல எனத் தெரியப் படுத்தியுள்ளனர். எதுவாயினும் பொருளாதார நிபுணர்களின் அறிவுறுத்தல், ஆதனம் வாங்குவது என்பது முக்கியமானதாக இருக்க வேண்டும். இதனை மனதில் வைத்து தமது பொருளாதாரத்தை கையாளப் பழகுதல் வேண்டும் என்பதே ஆய்வாளர்களின் கருத்து.

இன்றைய நிலையில் பணத்தின் பெரும் பகுதி அடமானத்திற்கும் ஆதனத்தைப் பராமரிப்பதற்கும் செல்கின்றது என்பது நிதர்சனமே.

நீண்டகாலத்தை மனதில் கொண்டு, ஆதனம் வாங்கும் சிந்தனையை மனதில் வைத்திருக்க வேண்டும். எனினும், சிலரின் கருத்தின்படி, பணத்தை பங்குச்சந்தையில் முதலிடுவதால் மேலதிகமாக பெறுமதியை அதிகரிக்கலாம் என்பதாகும்.

அத்துடன் வாடகைக்கு இருந்தால் விரும்பிய இடத்திற்கு எந்த நேரமும் இடம் பெயரக்கூடிய வசதிகள் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இருபக்கங்களும் நியாயம் தெரிகின்றது. வாடகைக்கு இருப்போர் தமது பணத்தைப் பெருக்குவதற்கு (Wealth) மிகப் பெரிய சுயகட்டுப்பாடு (Discipline) தேவைப்படுகின்றது. அதாவது, மேலதிகமாக இருக்கும் பணத்தை சுயகட்டுப்பாட்டுடன் தகுந்த இடத்தில் முதலிட்டுப் பாதுகாத்தல் வேண்டும்.

ஆதனம் கொள்வனவு செய்வதிலும் ஆபத்து உள்ளது. விலை குறையலாம், விலை ஏறாமல் இருக்கலாம் போன்றவை. தேவைக்கேற்ப உடனடியாக விற்க முடியாமலும் இருக்கலாம்.

சொந்தமாக ஆதனம் வாங்குவதிலும், ஒழுங்காக பணவரவு மற்றும் செலவுகளை கட்டுப்படுத்தாதோர் ஆதனம் வாங்கினாலும் சில நெருக்கடிக்குள் செல்வதனைக் காணக்கூடியதாகவும் உள்ளது. இவர்களும் சிலசந்தர்ப்பங்களில் பெரிய நெருக்கடிக்குள் செல்வதனையும் காணலாம்.

பொதுவாகக் கூறுவதாயின் வாடகைக்கு இருந்தாலும் சொந்தமாக ஆதனம் வாங்கியிருந்தாலும் தகுந்த சுயகட்டுப்பாட்டுடன் வருமானத்தையும் மற்றும் செலவையும் கவனிக்கத் தவறின் இரண்டிலும் நெருக்கடி தவிர்க்க முடியாததே. இதன் மறுதலையாக இரண்டிலும் பெரும் வகையான பணத்தை அதிகரிக்கச் செய்யக் கூடிய வழிமுறைகளும் காணப்படுகின்றது.

எதனை எவர் தெரிவு செய்தாலும் இந்தத் தொழில் அனுபவம்மிக்கவர்களின் தகுந்த ஆலோசனையைப் பெற்று அதற்கேற்ப தகுந்த முடிவுகளை எடுப்பதே சிறப்பாகும்.

# மாவீரர்களுக்கு வீரவணக்கம்



வீணைமைந்தன
shan.veenaimynthan@gmail.com

## படைச்செருக்கு அல்லது படைவீரன் பெருமிதம்

“புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து” - திருக்குறளில் மாவீரன்
அதிகாரம் 78: குறள் 780

இக்குறளுக்கான விளக்கத்தைக் கூறுவதற்கு முன் வாசகர்களை அல்லது மாவீரர் எழுச்சி நாளில் ஒன்று கூடுவோரை ஒரு போர்க்களம் நோக்கி அழைக்கிறேன்.

உண்மையில் இக்குறளுக்கான விளக்கத்தை மாவீரர்களுக்கு அஞ்சலி செய்து புனைந்துள்ளேன்.

களத்தில் போராடி விழுப்புண் தாங்கிய எனது மாவீரனுக்கு ‘ஆதன்’ என்பது பெயராகும்.

கீழடி அகழ்வாராய்ச்சியின்போது கிடைத்த பானையொன்றில் பலநூறு ஆண்டுகளுக்கு முன் பொறிக்கப்பட்ட நாமம் இது! நமது புலம்பெயர் தமிழ்ப் பெற்றோர் தங்கள் புதிய மகனுக்குச் சூட்டி மகிழக்கூடிய அழகிய பெயராகும்.

சரி வாருங்கள்! ஆதன் களமாடும் போர்க்களம் நோக்கிச் செல்வோம்.

போர்க்களம் புகும் முன்னர் தனது காதல் மனையாளிடம் சென்று, “கண்ணே! கேட்டாயா முரசொலியை... எனது திணவெடுத்த தோள்கள் புடைக்கின்றன. வாளுக்கும், வேலுக்கும் வேலை வந்துவிட்டதடி. எதிரிகளைப் பந்தாடி விட்டு விரைவில் வீடு திரும்புவேன். வேல் விழியாளே! வீரத்திலகமிடு! படைமுழக்கம் கேளாய்! தடையின்றி விடைகொடு” என்றான்.

விழுப்புண்படாத நாட்களெல்லாம் வீணான நாட்கள் எனக் கருதும் வீரமறவன் எங்கள் ஆதன்.

விழிப்பண்பாடும் வடிவழகி, முத்துநகை சிந்துகின்ற இதழ் குவித்து முத்தமழை பொழிந்து வெற்றியோடு திரும்பிடுக அத்தான் என்றாள்.

“வேல் தருவாய், விடை தருவாய், இடையில்லாப் பேரழகே!” என மடைதிறந்த காதல்மொழி பகர்ந்து மறவன் அவன் நடக்கலுற்றான். மாவீரன் அணிவகுப்பு நோக்கி.

போர்க்களத்தில் ஆதன் அவன் எதிரிகளைப் பந்தாடி எக்காளமிட்டு நகை செய்தான். செங்குருதிச் சகதியிலே இருதரப்பு வீரர்களும் இறுதி யாத்திரைக்குச் சித்தமானார்கள்.

இறுதி வெற்றி பகைவருக்கென்றோர் சேதி சொல்லி தூதுவந்தான் ஒரு வீரன்.

களத்தினிலே நம் காளை சுழல்காற்றாய், சூறாவளியாய் சுழன்று சுழன்று வாள் வீசினான்.



தனியொருவன், தலைவன் கண்ணெதிரே பகைப்படையின் பலமழித்தான்.

தோல்விப் புகைப்படலம் போக்கி நின்றான். வெற்றிக்கு வித்திட்டான்.

அய்யகோ! மறைந்து வந்த எதிரியின் அம்புக்குப் பலியானான்.

வெற்றிகண்ட படைத்தலைவன் ‘தம்பி’ என்பான். ஆதன் அவன் சாய்ந்துவிட்ட காட்சிதனைக் கண்டு கலங்கி நின்றான். விழித்திரையில் நீர்க்கோர்த்து விம்மினான், விசும்பினான்.

தலைவன் ‘தம்பி’யைப் பார்த்து ஆதன் சொன்னான்.

“தலைவா! என் சாவு கண்டு கண்ணீர் விடுவது வீரனுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது. சாவு என்றும் வரும். அது சமரிலே வருமென்றால் சரித்திரம் அன்றோ.”

தலைவன் ‘தம்பிக்கு’ கண்ணீர் வரவழைத்த அந்த வீரச்சாவு என்றென்றும் பாராட்டுக்குரியது. இதுவே, வள்ளுவர் கூறிய புகழாராம்.

புரந்தார்கண் நீர்மல்கச்... என்ற குறளின் பொருள் -
அதாவது, நாட்டைக் காக்கும் அரசனும் அழுது கண்ணீர்விடும்படி ஒரு வீரனுடைய உயிர்விடப் பெற்றால், அப்படிப்பட்ட மரணம் கெஞ்சிக்கேட்டாயினும் அடையத்தக்கது.

இதுவே மரியாதைக்குரிய, வணக்கத்திற்குரிய மாவீரர் மறைவு.

# மறக்க முடியாத நகைச்சுவையும் குணச்சித்திரமும் – டெல்லி கணேஷ்

## கண்ணன்

நடிகராக ஒருவர் நாற்பதாண்டு காலம் திரைத்துறையில் நீடிப்பது ஓர் இமாலய சாதனைதான். சத்தமே இல்லாமல், அந்த சாதனையை அழகாகச் செய்திருக்கிறார் டெல்லி கணேஷ். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு உட்பட பலமொழிகளில் அவர் நடித்து குவித்த படங்கள் நானூறைத் தாண்டும்.

தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடுதான் டெல்லி கணேஷின் சொந்த ஊர். இயற்பெயர் கணேசன். கணேஷனுக்கு மூன்று வயதாக இருக்கும் போது, அக்கா, கணேஷன், ஒரு வயதான தம்பி மூவரையும் நிர்கதியாக விட்டுவிட்டு தாய் மரணமடைந்தார். அப்போது அவரது தந்தைக்கு 20 வயதுதான். குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள என்று இரண்டாவது திருமணம் செய்துகொண்டார் தந்தை. ஆனால், டெல்லி கணேஷ் வார்த்தைகள் படி, சித்தியையும் அவரது வாரிசுகளையும் கூட அவர்தான் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது.

தந்தையின் இரண்டாவது திருமணத்தில் எட்டுக் குழந்தைகள். மொத்தமாக 11 குழந்தைகள். ஆனால், அந்தளவு வருமானம் இல்லாததால், கணேசனுக்கு இளம் வயதிலேயே வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை. வேலைக்காக மதுரைக்கு இடம்பெயர்ந்து டி.வி.எஸ்.சில் பணிபுரிந்திருக்கிறார்.

இந்நிலையில், இந்திய விமானப்படையில் வேலை கிடைக்க பெங்களூருக்கு இடம் பெயர்ந்தார். ஓராண்டு பயிற்சிக்குப் பிறகு தலைநகர் டெல்லிக்குப் பணி இடமாற்றம். வெறும் கணேசன், டெல்லி கணேஷ் ஆனதுக்கு இதுதான் காரணம்.

விமானப்படையில் இருந்தவர் நடிகரானது ஒரு விபத்து என்றே சொல்ல வேண்டும். 1964 முதல் 1974வரை பத்தாண்டு காலம் இந்திய விமானப்படையில் பணிபுரிந்திருக்கிறார் டெல்லி கணேஷ். இந்தக் காலகட்டத்தில் நடந்த இந்திய - பாகிஸ்தான் போரில் காயமடைந்த முப்படை வீரர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் அவர் நடிகராகக் காலூன்ற உதவிய முதல்படி. தொடர்ந்து, டெல்லியில் தக்சிண பாரத நாடக சபா நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார்.



01.08.1944 – 10.11.2024

விமானப்படையில் இருந்து விருப்ப ஓய்வு பெற்றபின் சென்னை வந்த டெல்லி கணேஷ், நடிகர் காத்தாடி ராமமூர்த்தி கம்பனி நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். விசு எழுதிய 'டௌரி கல்யாண வைபோகமே' நாடகத்தில் டெல்லி கணேஷின் நடிப்பைப் பார்த்து, அன்றைய பிரபல நடிகர்கள் ஜெய்சங்கர், நாகேஷ், மேஜர் சுந்தரராஜன் போன்றோர் பாராட்டி இருக்கின்றனர். 'எஸ்.வி. சுப்பையாவின் வாரிசு' என்பது டெல்லி கணேஷிக்கு அப்போதிருந்த செல்லப்பெயர். அதன்பின் 'பட்டணப் பிரவேசம்' நாடகத்தில் டெல்லி கணேஷின் நடிப்பை இயக்குநர் கே. பாலச்சந்தர் பார்க்க, அந்த நாடகம் 1976ஆம் ஆண்டு கே. பாலச்சந்தரின் இயக்கத்தில் திரைப்படமாக உருவெடுத்த போது, திரைப்பட நடிகராக மாறினார் டெல்லி கணேஷ். அவர் நடித்த முதல் திரைப்படம் அதுதான். 'பட்டணப் பிரவேசம்' படத்தின்போதுதான் அவரது பெயருடன் டெல்லி ஒட்டிக் கொண்டது. உபயம்: இயக்குநர் கே. பாலச்சந்தர்.

அதன்பின் 'ராஜபார்வை', 'புன்னகை மன்னன்', 'நாயகன்', 'மைக்கேல் மதன காமராஜன்', 'சிந்து பைரவி', 'ஆகா', 'தெனாலி' என ஏராளமான திரைப் படங்கள். "குணச்சித்திரமாகவும் நடிப்பார், காமெடியாகவும் நடிப்பார்" என்ற வடிவேலுவின் வசனத்தின் முழுவடிவம் டெல்லிகணேஷ். 'சிந்து பைரவி'யில் மிருதங்க வித்வான், 'மைக்கேல் மதன காமராஜ'னில் சமையல்காரர் பாலக்காட்டு மணி ஐயர், 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் வில்லன் பிரான்சிஸ் அன்பரசு, 'நாயகன்' படத்தில் வேலு நாயக்கருக்கு ஆப்த நண்பராக அருகில் இருந்து இந்தியைத் தமிழாக்கும் மொழி பெயர்ப்பாளர், 'பொல்லாதவன்' படத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர், 'தமிழன்' படத்தில் வழக்கறிஞர்; இப்படி பலபல வேடங்களில் பட்டை தீட்டிய வைரமாக மிளிர்ந்தவர் டெல்லி கணேஷ். கமல்ஹாசனுடன் டெல்லி கணேஷ் நடித்த 'அவ்வை சண்முகி'யில் சேதுராமய்யர் கதாபாத்திரம் அவ்வளவு எளிதில் மறக்க முடியாத கதாபாத்திரம்.

'கடற்கரை தாகம்' என்ற படத்தில் கதாநாயகனாகவும் நடித்திருக்கிறார் டெல்லி கணேஷ். எழுபதுகளில் பிரபல நடிகைகள் சுஜாதா (நடிகர் ஜெயம்ரவி மாமியார்), சுமித்ரா போன்றோர் அவருக்கு ஜோடியாக நடித்திருக்கின்றனர். 'பசி' படத்தில் ரிக்சாக்காரனாக நடித்தற்காக, அன்றைய தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் பரிசும் பெற்றிருக்கிறார்.

'சிந்துபைரவி' படத்தில் மேடையில் சுகாசினி பாடும் 'பாடறியேன்' பாடலுக்கு மறந்துபோய் மிருதங்கம் வாசிக்கத் தொடங்குவார் டெல்லி கணேஷ். ஜே.கே.பி.யின் கனல் கக்கும் பார்வையைக் கண்டதும் வாசிப்பைச் சட்டெனு நிறுத்தி அவர் காட்டும் முகபாவம், மிகச்சிறந்த நடிப்புக்கு இன்றும்கூட உரைகல்.

மலையாளத்தில் 'தேவாசுரம்', 'கீர்த்தி சக்ரா', 'போக்கிரி ராஜா', 'காலாபானி' மாதிரியான படங்கள் டெல்லி கணேஷ் நடித்த படங்கள். போதாக்குறைக்கு சொந்தமாக 'என்னுள் ஆயிரம்' என்ற ஒரு திரைப்படத்தையும் தயாரித்து கையைச் சுட்டிருக்கிறார்.

திரைப்படங்களைத் தொடர்ந்து, தொலைக் காட்சித் தொடர்களில் நடித்தார். 'வசந்தம்', 'கஸ்தூரி' போன்ற தொலைக்காட்சி நெடுந்தொடர்கள், குறும்படங்களில் மட்டுமல்ல, இறுதியாக ஓர் இந்தி வெப் சீரிஸிலும் டெல்லி கணேஷ் நடித்திருக்கிறார். 'அரண்மனை-4', 'இந்தியன்-2' போன்ற திரைப்படங்கள் அவர் கடைசியாக நடித்த திரைப்படங்கள்.

திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர், இன்றுள்ள யூடியூப், வெப் சீரிஸ் என அவரது கலையுலகம் விரிவடைந்தது. அந்தவகையில், முன்னை பழமைக்கும், பின்னை புதுமைக்கும் நடிகர் டெல்லி கணேஷ் ஒரு பாலமாக இருந்திருக்கிறார் என்றுகூடச் சொல்ல முடியும்.

நடிகர் என்பதைத் தவிர டெல்லி கணேஷிக்கு இன்னும் சில சிறப்பம்சங்களும் உண்டு. மகாகவி பாரதியார்பற்றி நிறைய படித்தவர். இரண்டு நூல்கள் எழுதியவர். பின்னணிக் குரல்தரும் டப்பிங் ஆர்ட்டிஸ்டாக இருந்தவர். டெல்லி, பெங்களூரு, சென்னை போன்ற பெரு நகரங்களில் வாழ்ந்தாலும் நெல்லை மண்ணை மணக்காமல், மண் மணக்க நெல்லைத் தமிழ் பேசுபவர். கோயில்களுக்கு நிறைய கொடையளித்தவர் டெல்லி கணேஷ். இதெல்லாம் டெல்லி கணேஷிக்கு உள்ள இதர பெருமைகள்.

பண்பட்ட நடிகர் என்பதுடன் சிலவேளைகளில் பணம் வாங்காமலும் நடித்திருக்கிறார் என்பது அவருக்குள்ள சிறப்பு. டெல்லி கணேஷின் கலைச்சேவைக்காக 1994ஆம் ஆண்டு அவருக்கு தமிழக அரசின் கலைமாமணி விருது கொடுக்கப்பட்டது.

நடிகர் டெல்லி கணேஷிக்கு இறுதியஞ்சலி செலுத்தியுள்ள நடிகர் ரஜினிகாந்த், "அருமையான மனிதர், அற்புதமான நடிகர்" என்று பாராட்டியிருக்கிறார்.

டெல்லி கணேஷ் உயிரோடு இருந்த காலத்தில், 'இந்தியாவின் தலைநகரத்தை பெயரில் தாங்கியவர்' என்று அவரைப் பாராட்டியிருக்கிறார் மற்றொரு நகைச் சுவை நடிகரான சார்லி. அப்பாராட்டை இன்னொரு நேரம் மீண்டும் சொல்லச் சொல்லிக் கேட்டு ரசித்திருக்கிறார் டெல்லி கணேஷ். டெல்லி கணேஷின் உடலுக்கு இறுதியஞ்சலி செலுத்த வந்த நடிகர் சார்லி இதை நினைவுகூர்ந்திருக்கிறார்.

டெல்லி கணேஷின் மறைவை முன்னிட்டு அவரைப் பற்றிய நினைவுகளை பெரும் நடிகர்கள் மட்டுமல்ல சாதாரண மக்கள் பலரும்கூட முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ளனர். இதில் ரசனை ஸ்ரீராம் என்பவர் தனது முகநூல் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'இளையராஜா இசைக்கு நடித்தவர்கள், வாயசைத்தவர்கள் உண்டு. ஆனால், ஒருவரின் நடிப்புக்கு ராஜா இசையமைத்தது டெல்லி கணேசுக்கு மட்டும்தான் நடந்தது. கிடைத்த வாய்ப்புகளில் டெல்லி கணேஷ் மெல்ல முன்னேறிக் கொண்டிருந்த நேரம். 'சிந்துபைரவி' மிருதங்க வித்வான் கதாபாத்திரத்துக்கு நன்கு மிருதங்கம் வாசிக்கத்தெரிந்த ஒருவரை (டிவிஜி) இயக்குனர் கேபி ஏற்கனவே போட்டுவிட்டார். ஆனால், குடித்துவிட்டு வாசிக்கும் கேரக்டர் எனத் தெரிந்தவுடன் 'நேக்கு சரியாப்படலை' என அவர் விலகிவிட்டார். கடைசி நிமிடத்தில் டெல்லி கணேசுக்கு வாய்ப்பு போகிறது.

"நீ மிருதங்கம் வாசிப்பியா, கத்துட்டிருக்கியா" டெல்லியை கூப்பிட்டு கேபி கேட்கிறார்.
"தெரியும் சார்."

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



# நானிலம் போற்றும் நட்பு - 56



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது திரிகடுகம் நூலின் அறுபத்து மூன்றாம் செய்யுளைக் கவனிப்போம்.

“நேர்வு அஞ்சாதாரோடு நட்பும், விருந்து அஞ்சும்
ஈர்வளையை இல்லத்து இருத்தலும், சீர் பயவாத்
தன்மையிலாளர் அயல் இருப்பும், - இம் மூன்றும்
நன்மை பயத்தல் இல.”

‘நேர்வு’ என்றால் ‘துன்பம்’ என்று பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தச் செய்யுளிற்கான பொருள் “துன்பத்துக்கு அஞ்சாதவர் நட்பும், விருந்தினர்க்கு உணவளிக்காத மனைவியும், நற்குணமில்லாதவரின் அயலில் குடியிருத்தலும் பயனற்றவை ஆகும்.” என்று உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

நாம் நட்பு கொள்ளுபவர் துன்பத்துக்கு அஞ்சாதவராக இருந்தால் அந்த நட்பால் பயனில்லை என்று புலவர் இந்தச் செய்யுளில் கூறியுள்ளார். ஒருவர் துன்பத்திற்கு அஞ்சாதவர் என்றால் துன்பம் விளைவிக்கவும் தயங்கமாட்டார் என்ற காரணத்தை வைத்துப் புலவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று நினைக்கின்றேன். விருந்தினர்க்கு உணவளிக்காத மனைவியும் பயனற்றவள் என்று விருந்தோம்பல் இல்லத்தரசியிடம் இருக்கவேண்டும் என்று புலவர் கூறுகின்றார். மேலும் நற்குணம் இல்லாதவர்கள் அயலில் குடியிருந்தால் சிக்கல் இருக்கும் என்ற விடயத்தை நாம் நன்கு அவதானித்திருப்போம். இது எக்காலத்தும் பொருந்தும் விடயம்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றி முப்பத்தி நான்காம் பாடலைக் கவனிப்போம்.

இது கோவேங்கைப் பெருங்கதவன் என்னும் புலவர் பாடிய பாட்டு. தலைவனுடைய பிரிவால் வருந்தியிருந்த தலைவி தன் தோழியிடம் கூறியது. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

தலைவன் தனது காதலியை விரைவிலே மணந்து கொள்ள வேண்டும் என்பதே அவன் ஆசை. அதற்காகவே அவன் பொருள் தேடப் போயிருக்கின்றான். அப்பிரிவைப் பொறுக்க முடியாமல் தலைவி புலம்பினாள். அதைக் கண்ட தோழி, “தலைவியே ஏன் வருந்துகின்றாய்? உன்னை மணப்பதற்காகத்தானே அவர் பொருள் தேடப் போயிருக்கின்றார். அவருடைய கூட்டுறவால் உனக்கு நன்மைதான் கிடைத்திருக்கிறது. நீ இப்படி வருந்துவது தகாது” என்றாள் தோழி. அவளுக்குத் தலைவி உடனே பதிலளித்தாள். தலைவி அளிக்கும் பதிலை இந்தச் செய்யுள் கூறுகிறது.

“அம்ம! வாழி! தோழி! நம்மொடு
பிரிவு இன்று ஆயின் நன்றுமன்தில்ல!
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூஉடை அலங்கு சினை புலம்பத் தாக்கிக்
கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி
நிலங்கொள் பாம்பின் இழிதரும்
விலங்கு மலைநாடனொடு கலந்த நட்பே.”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“தோழியே நான் சொல்லுகிறேன் கேள்! அருவிக்குப் பக்கத்திலே, குறுகிய கற்களுக்கு இடையிலே, வேங்கை மரம் ஒன்று வளர்ந்திருக்கின்றது. அந்த அருவி நீரின் காரணமாக அது நன்றாகப் பருத்து உயர்ந்து வளர்ந்திருக்கின்றது. அதன் கிளைகள் பூத்துக் குலுங்கி அசைந்து கொண்டிருக்கின்றன.

வேங்கை மரத்திற்கு இத்தகைய செழிப்பைக் கொடுத்தது அந்த அருவி. ஆனால் அந்த அருவி நிலத்திலே விரைவாக விழும்போது அந்த வேங்கை மரத்தின் கிளைகளை ஆட்டி அசைத்து அவற்றில் உள்ள மலர்களை உதிர்த்துத் தள்ளி விடுகின்றது. கற்களோடு மோதிக்கொண்டு, தாவிக் குதிக்கின்றது. எட்டியிருந்து அவ்வருவியைக் காண்போர் நிலத்திலே குதிக்கும் மலைப் பாம்போ என்று மருள்கின்றனர். இத்தகைய மலைநாட்டுத் தலைவனோடு நான் கொண்ட நட்பு, அவனைவிட்டுப் பிரியாமலிருந்தால் மட்டும் எனக்கு இன்பந்தரும். பிரிந்து நின்றால் துன்பத்தைத்தான் தரும். வேங்கை மரம் தழைப்பதற்கு அருவி நீர் ஆதரவாயிருந்தது உண்மைதான். ஆனால் அவ்வருவி நிலத்தில் விழும்போது அவ்வேங்கையைத் துன்புறுத்துகிறதன்றோ. அதைப் போன்றதுதான் எனது நிலைமை.” என்றாள் தலைவி.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றி முப்பத்தி ஐந்தாவது பாடலைக் கவனிப்போம்.

இது பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் புலவர் பாடிய பாட்டு. தலைவன் பிரிவை நினைத்து வருந்திய தலைவிக்குத் தோழி சொல்லிய ஆறுதல். இது பாலைத்திணை சார்ந்தது.

தலைவன் பொருள் தேடுவதற்கு வெளியூருக்குப்போக ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றான். புறப்படுவதற்கான ஏற்பாடுகளை மும்முரமாகச் செய்து கொண்டிருக்கின்றான். அவன் வெளியூருக்குச் செல்லும் செய்தியை இன்னும் தலைவியிடம் சொல்லவில்லை. ஆயினும் அவனுடைய பரபரப்பினால் செய்து கொண்டிருக்கும் காரியங்களால் எங்கேயோ புறப்படப் போகின்றான் என்பதைத் தெரிந்து கொண்டாள். உடனே அவள் உள்ளத்திலே கவலை பிறந்துவிட்டது. அவன் போய்விட்டால் தனித்திருக்க வேண்டுமே என்று தவித்தாள்.

தலைவன் பிரிவை நினைத்துத் தவிக்கும் தலைவியின் உள்ளத்தைத் தோழி தெரிந்து கொண்டாள். உடனே தலைவியின் உள்ளத்திலே ஆறுதல் பிறக்கும்படி சமாதானம் கூறினாள். தலைவனால் சொல்லப்பட்ட உண்மை மொழியை எடுத்துக் காட்டினாள். “தலைவன் பிரிந்து போக மாட்டான் வருந்தாதே” என்று கூறினாள்.




“வினையே ஆடவர்க்கு உயிரே வாள் நுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என
நமக்கு உரைத்தோரும் தாமே
அழாஅல் தோழி அழுங்குவர் செலவே”.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“ஆண்களுக்கு உயிர், ஏதேனும் தொழில் செய்து கொண்டிருப்பதுதான். அறிவுள்ள ஆண்கள் சோம்பேறித்தனத்தை மேற்கொள்ளமாட்டார்கள். சோம்பேறிகள் இவ்வுலகிலே சுகமடைய மாட்டார்கள். தேம்பித்தான் திரிவார்கள். ஆதலால் தங்கள் உடல் உள்ள வரையிலும், உடலிலே உரம் உள்ள வரையிலும் உழைத்துக்கொண்டுதான் இருப்பர். இந்த உழைப்பே ஆடவர்க்கு உயிராகும். இல்லத்தில் வாழும் பெண்களுக்குக் கணவனைத்தவிர வேறு உயிர் இல்லை. ஆகையால் அவர்கள் என்றும் கணவனுடன் பிரியாமலிருந்து வாழவே விரும்புவர். இதுவே உத்தமப் பெண்களின் உயர்ந்த தன்மை. இந்த உண்மையை நமது காதலர்தான் நமக்குரைத்தார். இப்படிச் சொல்லிய அவரே நம்மைத் தனியாக விட்டுவிட்டுப் பிரிவார் என்று எண்ணுவது தவறு. அவர் பிரிந்து போக மாட்டார். நீ வீணாக வருந்தி அழாதே.” இவ்வாறு தலைவன் சொல்லிய சொற்களையே எடுத்துக் காட்டி தலைவிக்கு ஆறுதல் உரைத்தாள் தோழி.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றி முப்பத்திஆறாவது பாடலைக் கவனிப்போம்.

மிளைப் பெருங்கந்தன் என்பவர் பாடிய பாட்டு இது. தலைவன், ஒரு தலைவியின் மேல் காமங்கொண்டான் என்பதை அறிந்தான் பாங்கன், “நீ இவ்வாறு காமம் கொள்ளுதல் தகுமோ” என்று கண்டித்தான். அப்பாங்கனுக்குத் தலைவன் காமத்தின் தன்மையை விளக்கினான். இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

தனக்குரியவளாக நினைத்த ஒரு தலைவியின்மேல் காதல் கொண்டிருந்தான் தலைவன். அளவற்ற விருப்பம் கொண்டிருந்தான். அவளே தன் உயிர்த்துணைவி, வாழ்க்கைத் துணைவி என்று உறுதி கொண்டிருந்தான். இதைக் கண்ட அவனுடைய தோழன் “நீ இவ்வாறு காமநோயால் வருந்துவது தகாது” என்று கூறினான்.

“காமம், காமம் என்ப, காமம்
அணங்கும் பிணியும் அன்றே, நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே, யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்து அது காணுநர்ப் பெறினே”.

இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

“காமம் பிறரால் உண்டாக்கப்படுவதன்று. ஒவ்வொருவரிடமும் இயற்கையாகவே இருக்கின்றது. அது, சமயம் நேரும்போது வெளிப்படும் என்ற உண்மையை உரைக்கும் பாடல். காமத்தின் இயல்பை அறியாதவர்கள் பலர் உண்டு. அவர்கள்தான், ‘காமம் காமம்’ என்று சொல்லி அதை இகழ்ந்து பேசுவர். குறை சொல்லுவர். காமம் என்பது எங்கிருந்தோ திடீரென்று புதிதாகத் தோன்றித் துன்புறுத்தும் ஒரு நோயன்று. அது மிகவும் நுண்ணியதாகி மெலிந்து போகக்கூடியதும் அன்று. அது மிகுதிப்பட்டு வெம்மையைத் தரக்கூடியதும் அன்று. மிகவும் தண்மையைத் தரக்கூடியதும் அன்று. அது நமது உள்ளத்தில் என்றும் அடங்கிக் கிடக்கின்றது.

யானையிடம் அடங்கிக்கிடக்கும் மதம், அது நல்ல கொழுத்த தழையைத் தின்றவுடன் வெளிப்படுகின்றது. அதுபோல நமது உள்ளத்தில் உறைந்து கிடக்கும் காமம், நம்மோடு என்றும் இணைந்து ஒருயிராய் வாழக்கூடியவரைக் கண்டபோது வெளிப்படுகின்றது. இதுவே காமத்தின் இயல்பாகும். இவ்வுண்மைகளை உணராதோர்தான் காமத்தைத் தூற்றுகின்றனர்.”

இவ்வாறு தலைவன் தனது தோழனிடம் காமத்தின் இயல்பை எடுத்துரைத்தான்.

இந்த மூன்று பாடல்களிலும் நட்பின் பெருமை நன்கு புலப்படுகிறது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். ‘நானிலம் போற்றும் நட்பு’ என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# கனடாவில் கார்த்திகைக் காந்தளும் பாப்பி மலரும்



குரு அரவிந்தன்

கனடாவில் நினைவுதினம் என்பது போர்க்காலத்தில் நாட்டுக்காக உயிர் தந்தவர்களையும், அக்காலத்தில் போர் முனையில் தம் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றியவர்களையும் கௌர விக்கும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் நொவெம்பர் மாதம் 11ஆம் திகதி அனுசரிக்கப்படுகின்றது. இதில் கொமன் வெல்த் நாடுகளைச் சேர்ந்த மரணித்த போர் வீரர்களும் அடங்குவர். இந்த வாரம் முழுவதும் கனடியர்கள் சிவப்பு நிறத்திலான பாப்பி மலர்களை அணிவதன் மூலம் மரணித்தவர்களை நினைவேந்தல் மூலம் கௌரவிக்கின்றனர். அமெரிக்கா வைச் சேர்ந்த மொய்னா மைக்கேல் என்பவர்தான் சிவப்பு பாப்பி மலரை 1918 ஆம் ஆண்டு இதற்காக அறிமுகம் செய்தார். 1921ஆம் ஆண்டு கனடாவில் இச்சிவப்பு பாப்பி மலர் இதற்காக அறிமுகமானது. கனடாவில் சில அமைப்புகள் வெள்ளைப் பாப்பி மலரை அறிமுகம் செய்தாலும் அது பெரிதாக மக்களிடையே பிரபலமடையவில்லை.

இதற்கு முன்பு தென்னாபிரிக்கப் போரின் நினைவு நாளாகக் கனடாவில் இந்தத் தினம் இருந்தது. முதலாம் உலகப்போரின் போது சுமார் 61,000 கனடியர் கொல்லப்பட்டனர். 1918ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம்தான் போர் நிறுத்தத் திற்கான கையெழுத்திடப்பட்டது. இதன் காரணமாக 1919ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 11ஆம் திகதி கனடியர்கள் போர் நிறுத்த தினத்தை நினைவேந்தல் தினமாக நினைவு கூர்ந்தாலும், உத்தியோகபூர்வ மான நினைவேந்தல் 1931ஆம் ஆண்டு தான் இத்தினத்தில் இடம்பெற்றது. அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளும் வெவ்வேறு பெயர்களில் இந்தத் தினத்தையே கடைப்பிடிக்கின்றன.

இந்த நினைவேந்தல், இரண்டாம் உலகப் போர், கொரியப் போர் மற்றும் ஆப்கானிஸ் தானில் நடந்த போர், அமைதிகாக்கும் பணிகள் மற்றும் பிற சர்வதேச இராணுவ ஈடுபாடுகளின்போது போரில் இறந்தவர் களின் நினைவாகவும் இடம்பெறுகின்றது. இதுவரை சுமார் 118,000இற்கும் அதிக மானோர் வெளிநாட்டு மோதல்களில் இறந்துள்ளதாகக் குறிப்புகள் தெரிவிக் கின்றன. 2020-2021 ஆண்டு கோவிட் பெருந்தொற்றுக் காரணமாக பொது இடங்களில் நடைபெறும் இந்த நினை வேந்தல் நிகழ்வுகள் இடம் பெறவில்லை.




தாயகத்தில் எம்முயிர் காக்கத் தம்முயிர் தந்தவர்களைத் தமிழர் நினைவுகூரும் நாளாகக் கனடாவில் நொவெம்பர் 27ஆம் திகதி இடம்பெறுகின்றது. அவர்கள் செய்த தியாகம்தான் இன்று நாங்கள் அனுபவிக் கும் சுதந்திரம் என்பதை அடுத்த தலை முறையினரும் இந்த நிகழ்வின்மூலம் அறிந்துகொள்ள இது ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கின்றது. முதல் இரு வாரங்களில் சிவப்புப் பாப்பி மலர்ச்சின்னம் அணிந்தவர்களையும் கடைசி வாரத்தில் காந்தள் மலர்ச் சின்னம் அணிந்தவர்களையும் பொது இடங்களில் காணமுடிகின்றது. ரொறொன் ரோவில் நொவெம்பர் 27, 2024, 6900 எயர்போட் வீதி, மிசிசாகாவில் உள்ள இன்ரநசனல் சென்ரரிலும் (6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8) மொன்றியலில் Le Cateau Royal மண்டபத்திலும், ஒட்டாவாவில் Nepean Sportsplex என்ற இடத்திலும் மேலும் பலஇடங்களிலும் இந்த நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

Laurence Binyon என்பவரால் 1914ஆம் ஆண்டு எழுதப்பட்ட 'For the Fallen' என்ற கவிதையில் இருந்து Act of Remembrance என்ற வரிகள் எடுக்கப் பட்டு உலகெங்கும் உள்ள அனேகமான போர்க்காலக் கல்லறைகளில் பொறிக்கப் பட்டன. அந்தப் பாடலின் சில வரிகள் இதோ: "உயிரோடு எஞ்சியிருக்கும் நாம் முதுமை அடைவதுபோல இவர்கள் முதுமையடைய மாட்டார்கள். வயது இவர்களைச் சோர்வடையச் செய்யாது, முதுமை இவர்களைத் தண்டிக்காது. சூரியன் மறையும் நேரத்திலும், காலையிலும், நாம் அவர்களை நினைவில் கொள்வோம்."

நிச்சயமாக எம் உயிர் காக்கத் தம் உயிர் தந்தவர்கள் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர்கள், காலம் மறந்தாலும் நாம் மறக்கக்கூடாது!




## மறக்க முடியாத....

09ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால், டெல்லிக்கு வாசிக்கத் தெரி யாது. வாய்ப்பை நழுவவிடக்கூடாதே எனப் பொய் சொல்கிறார். அந்தக் குறிப்பிட்ட ஜேகேபி வீட்டுத் தோட்டத்தில் கோபத்தில் வாசிக்கும் காட்சி வருகிறது. ஷாட்டில் டெல்லி கணேஷ் இயக்குனர் சொன்னதை விட அருமையாகச் செய்கிறார். வசனம் தனி, வாசிப்பு தனி என இருந்ததை ஒன்றாக்கி, "உங்களுக் காச்சு எனக்காச்சு பார்த்துரலாம்ண்ணா" என அழுகையுடன் வாசிக்கிறார்.

இந்த சீன் பின்னணியிசைக்கு ராஜா அவர்களிடம் வருகிறது. எப்போதுமில்லாத படி, அக்காட்சியில் நடித்த குணச்சித்திர நடிகரான டெல்லியை தன்னை வந்து பார்க்கச் சொல்கிறார். பயந்துகொண்டே டெல்லி கணேஷ் போய்ப் பார்க்கிறார்.

"உனக்கு மிருதங்கம் வாசிக்க தெரியுமா?"
"தெரியாது சார்."

"அது தெரிஞ்சுது. ஆனா தெரியாத மாதிரி பிரமாதமா நடிச்சிருக்க. உன் நடிப்புக்கு நான் வாசிச்சிருக்கேன் பார்" என சீனை இசையோடு காட்டுகிறார். அச்சு அசலாய் டெல்லிகணேஷ் வாசித்ததுபோல கச்சிதமாய் இன்றுவரை நினைவில் நிற்கும் ஒரு காட்சியாய் அமைந்து விடுகிறது. அக்காட்சியில் மட்டுமல்ல 'பாடறியேன்' பாடல் உட்பட ஏனைய கச்சேரி சீன்களிலும், டெல்லி கணேஷ் வாசிப்பதுபோலவே அச்சு அசலாய் ஒரு தோற்ற மயக்கம் ஏற்படும். இதை 'தில்லானா மோகனாம்பா'ளில் சிவாஜி நாதஸ்வரம் வாசிப்பது, பாலையா தவில் வாசிப்பதுடன் ஒப்பிட முடியும்.

அவரின் பெரும்பான்மையான கதா பாத்திரங்களில் உடல்மொழி உட்பட கதாபாத்திரத்திற்குள் இறங்கிவிடுவார். சிந்துபைரவியில் சிவகுமார் "என்ன



சப்போட்டா வாசனை?" எனக் கேட்பார். "டெல்லிகணேஷின் வெத்தலையை அதக்கியது போன்ற திருட்டுமுழியிலேயே அவரின் சல்பேட்டா நெடி நமக்கும் அடிக்கும்" என்று எழுதியுள்ளார்.

எண்பது வயதான டெல்லி கணேஷ் அண்மையில்தான் அவரது எண்பதாவது திருமண விழாவை கொண்டாடியிருக்கிறார். டெல்லி கணேஷ் மறைந்த அன்று, செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அவரது மகன் மகாதேவன் சொன்னார். "நைட், தூங்கப் போறதுக்கு முன்புகூட நல்லாத்தான் பேசிக்கிட்டிருந்தார்." ஆம், இரவில் வழக்கம்போல தூங்கப் போய் இருக்கிறார் நடிகர் டெல்லி கணேஷ், காலையில் கண் விழிக்கவில்லை. பலரும் இப்போது நினைவுகூரும்படி, அவர் விரும்பியது மரணம் அதுதான்.

மறைந்தாலும் வரலாற்றில் வாழ்வீர்கள் டெல்லி கணேஷ்.

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. December 01, 2024.
**Email: ttrkms@yahoo.ca**
தொடர்புகளுக்கு: **647.938.2300**

**NEILSON & MORNINGSIDE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.502.9432**

**MARKHAM & HIGHGLEN**
2/3 Bedrooms & 2 washroom bsmt for rent. Sep. entrance, 2 parking. Close to Markham Rd, schools & all facilities. Avail. Dec. 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.554.6553**

**MORNINGSIDE & ELLESMERE**
1 +1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to TTC & Toronto University. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.763.9120**

**MORNINGSIDE & MCNICOLL**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. December 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.567.7959**

**WARDEN & HWY 401**
1 Bedroom walkout bsmt for rent. Close to TTC & all facilities. Rent $1,200 + 30% Utility. 1 Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.318.2283**

**PORT UNION & LAWRENCE**
2 Bedrooms new bsmt for rent. Kitchen, washroom & 1 Parking. Close to bus stop, go station & all facilities. Avail. Dec. 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.289.8514**

**BRIMLEY & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.843.0011**

**MARKHAM & 14TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Family preferred. Close to school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.878.3342**

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to all facilities. Couple /Small family preferred. Avail. immediately.
**416.613.1792 / 437.260.6478**

**WARDEN & HWY 401**
1 large bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking.2 People preferred. Close to TTC & all facilities. Avail. January 01, 2025.
தொடர்புகளுக்கு: **647.740.9279**

**SALEM & ROSSLAND (AJAX)**
2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Close to bus stop, HWY 401/412 & all facilities. Avail. Dec. 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**MORNINGSIDE & SHEPPARD**
(Rouge) 2 Bedrooms very Spacious bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.984.9783**

**MARKHAM & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. No parking. Close to all TTC & all amenities. Rent- $1,650. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.802.5558**

**MARKHAM & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, Wifi & 1 Parking. 5 min. walk to Bus, school, bank, mall & HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**WHITES RD & TAUNTON**
2 Bedrooms & 1.5 Washrooms walk out brand new bsmt for rent. Sep. entrance, laundry & 1 parking. Avail. December 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.726.8304**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close Eraa super market & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.448.6206**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Sep. laundry & parking. Couple or students preferred. Avail. December 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**MORNINGSIDE & OLDFINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.568.5078**

**WHITES RD & TAUNTON**
3 Bedrooms bsmt for rent. 2 Washroom, Sep. entrance, parking & laundry. Avail. Nov. 15, 2024.
**647.642.8068/ 647.467.7660**
**416.509.5484**

**MCCOWAN & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. No smoking & no pets. Avail. December 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.761.7048**

**HOOVER PARK DR. & 10TH LINE STOUFFVILLE**
1 Bedroom & 1 washrooms bsmt Apt. for rent. Sep. entrance,parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

**BROCK & KINGSTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Walking distance to bus stop, Go station, HWY 401 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.894.8629**

**DONALD COUSENS & HWY 7**
1 Big bedroom bsmt for rent. Sep. entrance. Couple /small family preferred. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.559.2565**

**ELLESMERE & MORRISH**
3 Bedrooms & 3 washrooms brand new bsmt for rent. Sep. entrance & laundry. Close to U of T & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.949.6204**

மேலும் பக்கங்கள் 13, 14, 15

## BASEMENT FOR RENT

**MCCOWAN & KINGSTON**
2 Bedrooms bsmt for rent. 2 Sep. entrance & 1 parking. Close to Eglinton Go station, TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.786.3436**

**MEADOWVALE & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to HWY 401. 24 hrs. bus service. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.939.4381**

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & no parking. 2 Min to bus stop (24X7) Avail. immediately.
**416.335.1003 / 647.898.1819**

**KENNEDY & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to Milliken high school & community center. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.205.0520**

**MARKHAM & LAWRENCE**
3 Bedrooms & 2 washrooms bsmt for rent. Sep. entrance, 2 parking & laundry. Small family/Single preferred. Avail. immediately.
**416.930.5307/ 416.829.0875**

**SHEPPARD & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, washroom, sep. laundry & parking. 5 min walk to TTC. Avail. December 01, 2024
தொடர்புகளுக்கு: **647.390.8269**

**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Close to Centennial college & HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.221.5886**

**TAIUNTON & BURKHOLDER PICKERING** – 2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 Parking. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.680.3167**

**EGLINTON & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.8086**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**WESTNEY & ROSSLAND (AJAX)**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. No parking. Close to grocery store, Mall & all facilities. Avail. immediately.
**250.613.8389/647.225.9798**

**MIDLAND & FINCH**
1 Shared bedroom for rent in a bsmt. Sep. entrance, kitchen & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.774.6599**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance. Students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom for rent in a town house. Female preferred. Close to Eraa supermarket, TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.677.5488**

**BRIMLEY & STEELES**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, parking & laundry. Close to TTC. Student preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.786.5816**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent in a bsmt. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.808.0406**

**TAPSCOTT & CROW TRAIL**
1 Bedroom for rent in main floor. Working Female preferred. No parking. Avail.immediately.
தொடர்புகளுக்கு**: 647.261.3482**

**MORNINGSIDE & KINGSTON**
2 Bedrooms for rent in a 3 bed rooms house. Ladies only. Shared washroom & kitchen. Parking. Avail. December 01, 2024.
**437.778.5509 /416.821.8856**

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedrooms for rent in a bsmt. Working Ladies /student. No pets & no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.822.8446**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a main floor Sharing washroom & kitchen. Ladies only. Close to TTC & Shop ping center. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.533.2209**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms for rent in a house. Parking & furnitures available. Girls only. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.992.7694**

**MORNINGSIDE & ELLESMERE**
Furnished rooms for rent. Single room $900 & sharing room (2 per son) - $500 per person. (Including utility) Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.312.1947**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom available in a 3 bed room bsmt. Male only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.708.3444**

**14TH AVENUE & 9TH LINE**
Master bedroom & 1 Room for rent in a bsmt with attached washroom. Shared kitchen & Parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.1796**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent in a 2 Bedrooms bsmt. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**WARDEN & FINCH**
1 Bedroom for rent in a 3 bed rooms Condo. Sharing washroom & Kitchen. Male only. Avail. December 01, 2024.
தொடர்புகளுக்கு**: 416.704.4444**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom for rent in upstairs. parking & internet. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.576.1074**

**MIDDLEFIELD & HIGHGLEN**
Room for rent in main floor. Parking. Close to Aaniin community centre, high school & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.762.5804**

**KENNEDY & EGLINTON**
1 Large room for rent in a 2 bed room Apartment. 2 People/ couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.540.9520**

**MORNINGSIDE & FINCH**
1 Sharing room for rent in a 3 bed room bsmt. Sep. entrance & Parking. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.275.7764**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Close to TTC. Working /student Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

**HARMONY & TAUNTON**
Room available for rent in Oshawa. Close to all amenities and transportation. Student or working professional preferred.
தொடர்புகளுக்கு: **647.545.0344**

**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, parking. Single /2 person preferred. Rent negotiable. Avail. immediately. தொடர்புகளுக்கு:
**437.982.3330/ 647.237.6826**

**MIDLAND & LAWRENCE**
Bedrooms for rent in upstairs with attached washroom. Close to TTC & all facilities. Avail. immediately.
**647.763.8640/ 647.765.2743**

**BRIMLEY & EGLINTON**
Room & Bachelor room with wash room & kitchen for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193/ 416.892.7762**

**MCCOWAN & SHEPPARD**
1 Room for rent in a luxury condo. (ground floor). Sep. washroom. Female preferred. Close to all facilities. Avail. immediately.
**647.760.3376 / 647.835.3376**

## CONDO. FOR RENT

**NEILSON & MCLEVIN**
410 Mclevin Ave. - 2 Bedrooms & 2 washrooms condo. for rent. Avail. January 04, 2025.
**Ganesh :416.629.0065**

**TAPSCOTT & MCLEVIN**
3 Bedrooms new condo. for rent. 1 Min. to bus stop. Close to all facilities. Avail. immediately.
**416.400.7354 /416.303.1008**

**MCLEVIN & TAPSCOTT**
1 Bedroom + Den & 1.5 washroom Brand new Condo. town house for rent. Close to access the bus & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.844.1447**

**WARDEN & HWY 07**
1 + Den Condo. for rent. 1 Parking. Close to HWY 407 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.989.3804**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**
3 Bedrooms house & 2 bedrooms bsmt for rent. Sep. entrance. Close to TTC & all facilities. Avail. December 01, 2024.
தொடர்புகளுக்கு**: 416.566.1918**

## BASEMENT FOR RENT

**BROCK & ROSSLAND (AJAX)**
2 Bedrooms & 2 washrooms bsmt for rent. sep. entance, Parking & laundry. Close to dhurham bus & all facilities. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு**: 416.908.6810**

## BASEMENT FOR RENT

